மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைக்காக நிலம் கொடுத்தவர்களில் யார் யாருக்கு எல்லாம் வேலை கொடுக்கப்படும் என்பதற்கு அரசாணை எண்.656, வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-6-1978-ஆம் ஆண்டு ஆணையின்படி தான் இப்போது வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. பொதுத் துறை நிறுவனத்திற்காக எடுக்கப்பட்ட நிலங்களை ஒரு குடும்பத்தின் முக்கிய வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்தால், அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கலாம். இது வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் இல்லாமல் நேரடியாகக் கொடுக்கலாம் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நில எடுப்பில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதில் நிலச் சொந்தக்காரர் அல்லது நிலத்தை பயிர் செய்து வந்த குத்தகைக்காரர் அல்லது வாரம்தாரர் ஆகியோர் அடங்குவர். உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல் தத்து எடுத்தவர்கள் அந்தப் பட்டியலில் இல்லை. அவர்களுக்கு வேலை கொடுக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 214, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

214—

மாம்பட்டு நெசவாளர்களுக்கு கடன் உதவி வழங்குதல்

* **23943**—திரு. தா. வேடியப்பன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு கிராம நெசவாளர்களுக்குச் சொந்தமாக தொழில்புரிய நடைமுறை மூலதனக் கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தனியார் நெசவாளர்கள் சொந்தமாக தொழில்கள் செய்ய அரசினால் நடைமுறை மூலதனக் கடனுதவி வழங்கும் திட்டம் தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆகவே இவ்வினா எழவில்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகுதான் சிறப்பான முறையில் நெசவாளர் பெருமக்களுக்கு எல்லாம் முக்கியத்துவம் கொடுத்து, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கவனித்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே எங்களுடைய போளூர் ஒன்றியத்திலே இருக்கக் கூடிய மாம்பட்டு கிராமம் ஏறத்தாழ 5000 நெசவாளர்களைக் கொண்டது. அதுமட்டுமின்றி அத்துணை நெசவாளர்களும் சிறுசேமிப்புத் துறை மூலம் பதிவு செய்து தினமும் சிறு சேமிப்பிலே ஊக்கமாக இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ராஜ்மோகன் அவர்கள் அந்தக் கிராமத்திற்கு சிறப்பு தன்னிறைவு கொடுத்து, முக்கியத்துவம் கொடுத்து அத்துணை வசதிகளையும் செய்து கொடுத்தார்கள். அந்த அடிப்படையிலே இந்த நெசவாளர்கள் மேல் பற்று கொண்டு மூலதனக்கடன் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக நெசவாளர்கள் இருந்தால் அவர்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக வழங்கப்படுகிறது. இதைத் தவிர நபார்டு மூலமாகவும் வழங்கப்படுகிறது. இந்தக் கடன்களுக்கு அரசு உத்தரவாதம் அளிப்பதால் இச்சலுகையினை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மட்டுமே பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தனியார் நெசவாளர்கள் பெற வேண்டுமென்றால் அவர்கள் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொண்டால் அவர்களுக்கு அதன் மூலமாக மூலதனக் கடனைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்தவர்களைப் போல இவர்கள் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும். அப்படி தனியார் ஏறக்குறைய 10000 பேர்கள் இதிலே பதிவு செய்து இருக்கிறார்கள். அப்படி பதிவு செய்து கொண்டால் இவர்களுக்கு அந்த மூலதனக் கடன் வழங்குவதற்கு உரிமை இருக்கிறது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பகுதியிலே இருக்கக் கூடிய மாம்பட்டு கிரமாமத்தில் இருக்கக் கூடிய நெசவாளர்கள் தங்களை இந்தச் சங்கத்திலே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். கருணையோடு அப்பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கேயிருக்கக் கூடிய நெசவாளர்களுக்கு கடன் வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் உதவி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, அதற்கு பதில் அளிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 4]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்துகொண்டால் நிச்சயமாக அவர்களுக்கு அந்தக் கடன் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் கண்டிப்பாக செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 215, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

215 —

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஊனமுற்றோர் நலப்பள்ளி அமைத்தல்.

***25106**—*திரு. பி.வி. இராஜேந்திரன் :*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் நடப்பாண்டில் விடுதி வசதியுடன் கூடிய ஊனமுற்றோர் நலப்பள்ளி அமைத்திட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளியை தொண்டு நிறுவனங்கள் மூலமே செயல்படுத்த ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் நடப்பாண்டில் ஏதும் ஊனமுற்றோர் நலப்பள்ளி அமைத்திடுவதற்கு பரிசீலனையில் இல்லை. ஆனால் தொண்டு நிறுவனங்கள் யாராவது முன்வந்தால் அதற்கு ஏற்ற உதவிகள் செய்து தரப்படும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனம் என்பது பலவகை நோயினால் ஏற்படுகிறது. குறிப்பாக போலியோ நோயினால் பாதிக்கப்படும்போது கை, கால் ஊனம் ஏற்படுகிறது. ஆகவே போலியோ நோயினை முழுமையாக ஒழித்து, அவர்களுக்கு வேண்டிய கருவிகள் அனைத்தும் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் உள்ளம் ஊனமுற்றவர்களுக்கு, அவர்களுக்காவது ஒரு நலப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.